பக்கங்கள் 6 விலை சதம் 40 ★★

# ஈழநாடு
The EELA NADU

மலர்: 19 ஆனி 6 றஜப் 2 இதழ்: 129
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 20-6-77


# கலைஞர் கருணாநிதி எதிர்க்கட்சித் தலைவர்!

## அன்பழகன் துணைத்தலைவர்

சென்னை, ஜூன் 19 திராவிடமுன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் மு. கருணாநிதி எதிர்க்கட்சித் தலைவராக இன்று தெரிவு செய்யப்பட்டார்.

தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் வெற்றியீட்டிய தி.மு.கழக உறுப்பினர்கள் தங்களின் தலைவரைத் தெரிவு செய்வதற்காக இன்று காலையில் இங்கு கூடினர்.

ஒருமணி நேரத்துக்குள்ளேயே சுமுகமாக நடந்து முடிந்த இந்த விசேஷ கூட்டத்தில் கலைஞர் மு. கருணாநிதியே தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இதன் மூலம் தமிழ்நாடு சட்டசபையின் பிரதான எதிர்க்கட்சித் தலைவராக கலைஞர் விளங்குவார்.

இக் கூட்டத்தின் பின்னர்
(6-ம் பக்கம் பார்க்க)

# அ.இ.அ.தி.மு.க. தலைவர் தெரிவு

# இன்று நடக்கிறது

## எம். ஜி. ஆர்: ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்படலாம்

### மந்திரிசபையில் வெளியாருக்கு இடமில்லை?

(நமது விசேஷ நிருபர்)

**இன்று திங்கட்கிழமை நடைபெறும் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் விசேஷ கூட்டத்தில் மக்கள் திலகம் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அ. இ. அ. தி. மு. கழகத்தின் புதிய தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்படுவார் என்று அ. இ அ. தி. மு. கழக வட்டாரங்களிலிருந்து நம்பகமாகத் தெரியவருகிறது. திரு. எம். ஜி. இராமச்சந்திரனே தமிழ்நாட்டின் புதிய முதலமைச்சராகப் பதவியேற்பார் என்று இந்த வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றன. புதிய அமைச்சரவையில் யார் யார் இடம்பெறுவார்கள் என்ற விபரம் இவ்வாரம் அறிவிக்கப்படும்.**

தமிழ்நாடு சட்டசபைத்தேர்தலில் பெரும்பான்மைப்பலம் பெற்று ஆட்சி அமைக்கப் போகும் அ. இ. அ. தி. மு. கழகத்தின் விசேஷ கூட்டம், இன்று திங்கட்கிழமை இங்கு நடைபெறுகிறது. கழகத்தின் புதிய தலைவர், மற்றும் சில பொறுப்பான பதவிகள் வகிப்போரினது தெரிவு இன்றைய கூட்டத்தில் இடம்பெறும்.

### தலைவர் தெரிவு

இன்று நடைபெறும் விசேஷ கூட்டத்தில், அ. இ அ. தி. மு. கழகத்தின் தலைவராக திரு. எம். ஜி. இராமச்சந்திரன் ஏகமனதாகத் தெரிவு செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அ. இ. அ. தி. மு. கழகத்தின் தலைவராக திரு. எம். ஜி. இராமச்சந்திரனே வரவேண்டுமென்றும், அவரே தமிழகத்தின் புதிய முதலமைச்சராகப்பதவி யேற்கவேண்டுமென்றும் அ. இ. அ. தி. மு. கழகத்திற்குள் ஏகோபித்த குரல் ஒலிக்கத் தொடங்கியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

### வெளியாருக்கு அமைச்சர் பதவி?

இவ்வாரத்தில் அமைக்கப் படவிருக்கும் புதிய அமைச்சரவையில், வெளியார் யாரும் இடம்பெறுவார்களா என்பது ஓரளவு சந்தேகமாக இருப்பதாக அ.இ அ. தி. மு. கழகத்துடன் தொடர்புள்ள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

புதிய அமைச்சரவையில், அ. இ. அ. தி. மு கழக அங்கத்தவர்களுக்கே முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும் என்றும் மந்திரிசபையில் வெளியாரைச் சேர்ப்பதைத்தவிர்க்க வேண்டுமென்றும் கழகத்தின் முக்கிய உறுப்பினர்கள் தலைமைப்பீடத்துக்கு கோரிக்கை எழுப்பியுள்ளனர். அ. இ. அ. தி.மு.கழக கூட்டணியில்இடம் பெருத மாற்றுக்கட்சியினர்அல்லதுவெளியாருக்கு மந்திரிசபையில் இடம் அளிக்கக்கூடாது என்று பலர் கழகப் பொதுச் செயலாளரைக் கேட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

### நாஞ்சில் நிலை

தமிழ்நாட்டுத் தேர்தலில் அ. இ அ. தி. மு. கழகம் வெற்றி பெற்றால் உதவிப் பொதுச்செயலாளர் திரு.நாஞ்சில் மனோகரன் தான் முதலமைச்சராக வருவார் என்று முன்னர் கருதப்பட்டது. நிலைமை இப்படியாக இருந்த போதிலும், முதலமைச்சராக மக்கள் திலகம் எம். ஜி ஆர் தான் வரவேண்டும் என்று வற்புறுத்தல்கள் வெளியானதைத் தொடர்ந்து "முதலமைச்சராக நான் தான் வருவேன்" என்றுதிரு எம்ஜி.ராமச்சந்திரன் தேர்தல் பிரச்சாரக் கூட்டமொன்றில் அறிவித்திருந்தார். இதனைத் தொடர்ந்து,ஏராளமான கழக ஆதரவாளர்கள்மகிழ்ச்சி தெரிவித்து
(2-ம் பக்கம் பார்க்க)

## "நிர்வாகம் சீர்பெற அரசு ஊழியர் ஒத்துழைப்புவேண்டும்"

### எம். ஜி. ஆர். கூறுகிறார்

சென்னை, ஜூன் 19. "நிர்வாகம் சிறுடன் நடைபெறுவதற்கு அரசாங்க ஊழியர்கள் விசுவாசத்துடன் கடமைபுரிய வேண்டியது அவசியமாகும்" என்று அ.இ. அ.தி.மு.க தலைவர் திரு.எம். ஜி.ராமச்சந்திரன் கூறியுள்ளார்.

இன்றுசென்னையில் தம்மைச் சந்தித்த அரசாங்க ஊழியர் குழு ஒன்றின் மத்தியில் பேசுகையிலே திரு.எம்.ஜி ஆர் இவ்வாறு கூறினார்.

"ஊழியர்களின்ஒத்துழைப்பு பரிபூரணமாக இருப்பின் ஆட்சி சிறப்புடன் நடைபெற உதவியாக இருக்கும்" என்று அவர் குறிப்பிட்டார். (உ)

**'ஈழநாடு' தேர்தல் 77 போட்டி**

மேற்படி போட்டிக்கான பிரவேசப்பத்திரம் உள்ளே இருக்கின்றது.

தமிழ்நாடுதேர்தல்

## பந்தயம் நிறைவேற மொட்டை அடித்தனர்!

சங்கானை, ஞாயிறு

தமிழ்நாட்டில் நடந்து முடிந்த தேர்தலில், அ. இ. அ. தி. மு. கழககமும், அதன் பொதுச்செயலாளர் மக்கள் திலகம் எம். ஜி. ராமச்சந்திரனும் வெற்றியீட்டியமைக்கு அக்கட்சியைச் சேர்ந்த சங்கானை இளைஞர்கள் தமது மகிழ்ச்சியைத் தெரிவிக்குமுகமாக ஏராளமான நண்பர்களுக்கு தேநீர் விருந்து அளித்து மகிழ்ச்சி கொண்டாடினர்.

அதே நேரத்தில் தி. மு. க. ஆட்சியைக் கலைத்து பல ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை முடியாடலேயே பல சோதனைகளுக்கும் ஆளாகி தன்னந்தனியே தேர்தலில் நின்று 48 ஆசனங்களைக் கைப்பற்றிய கலைஞர் கருணாநிதியின் வெற்றிக்கு கலைஞரின் சங்கானை ஆதரவாளர்கள் வெடி கொளுத்தி மகிழ்ச்சியைக் கொண்டாடினர்.

இவர் தமது பந்தயம் நிறைவேறாமையால் மொட்[illegible] குறும்[illegible] நிறைவேற்றினர்.

## சங்கானையில் தலைதூக்கும் வன்செயல்கள்!

### கார் சுக்குநூறானது

சங்கானை, ஞாயிறு

சங்கானை பஸ் நிலையத்திற்கு அருகாமையில் நிறுத்திவைக்கப் பட்டிருந்த ஒரு கார் சுக்கு நூறாக உடைத்து சேதப்படுத்தப்பட்டது! இச்சம்பவம் இரு தினங்களுக்கு முன்னர் நிகழ்ந்தது.

கார் நிறுத்திவைக்கப்பட்ட இடத்திற்கு அருகாமையில் இருந்த பேக்கரி ஒன்றில் விற்பனைக்கிருந்த சோடாப் போத்தல்களும் வெற்றுப்போத்தல்களும் காரின்மேல் வீசப்பட்டமையால் காரின் நாலாபுற கண்ணாடிகளும் சுக்குநூறுக்கப் பட்டதாம்!

எதிர்பாராதவகையில் நிகழ்ந்த இச்சம்பவத்தினால் போக்குவரத்து தடைப்பட்டு, பாதசாரிகளும் நடமாடமுடியாத நிலை ஏற்பட்டது. அவ்விடத்தில்நின்ற பஸ்பிரயாணிகள், பெண்கள், குழந்தைகள் உட்பட பலரும் பயத்தினால் சிதறி நாலாபக்கமும் ஓடத்தொடங்கிவிட்டனர்.

இச்சம்பவம் குறித்து பொலிசில் புகார்செய்யப்பட்டுள்ளது. சந்தேகநபர்களை சங்கானைப் பொலிசார் கைதுசெய்வதில் முனைந்துள்ளனர்.

இப்பகுதியில் அடிக்கடி தலைதூக்கும் வன்செயல்கள்குறித்து நடவடிக்கை எடுத்து ஒரு தீர்வுகாணுமாறு பொதுமக்கள் பொலிஸ்பகுதி மேலிடத்திற்கு புகார் செய்துள்ளனர்.

### பிறப்புச்சாட்சிப்பத்திரம்இல்லை!

## 500 குழந்தைகள் பாதிப்பு!

### பால்மாவு, சீனிபெறுவதில் கஷ்டம்

தெல்லிப்பழை, ஞாயிறு

கடந்த மூன்று மாதங்களில் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் பிறந்த குழந்தைகளுக்குப் பால்மா, சீனி என்பன பெறும் வாய்ப்பு இல்லாது இருப்பதாகப் பொதுமக்கள் கவலையும் அதிருப்தியும் தெரிவித்துள்ளனர்.

இங்கு பிறக்கும் குழந்தைகளுக்கான பிறப்புச்சாட்சிப் பத்திரம் வழங்கப்படுவதில் ஏற்பட்டுள்ள தாமதமே இந் நிலைமைக்கு காரணமெனக் கூறப்படுகிறது.

தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரியில் கடந்த ஏப்ரல் மாதம் 12-ந் திகதி பிறந்த குழந்தை ஒன்றின் தந்தை பிறப்புச் சாட்சிப்பத்திரம் பெறுவது தொடர்பாக மல்லாகம் பிரிவு பதிவாளருடன் தொடர்பு கொண்டார், பிறப்புச் சாட்சிப்பத்திரம் வழங்குவதற்கான படிவங்கள் கொண்ட புத்தகம் முடிந்துவிட்டதென்றும், ஆனால் அப் புத்தகம் கிடைக்கும்வரை பிறப்புச் சாட்சிப்பத்திரம் வழங்க முடியாமலிருப்பதாகவும், கடந்த மார்ச் மாதம் 29-ந் திகதி தொடக்கம் இந்த நிலைமை இருந்து வருவதாகவும் பிரஸ்தாப தந்தைக்குத் தெரிவிக்கப்பட்டது.

இப்படியாக ஐந்நூறுக்கு அதிகமான குழந்தைகளுக்குப்பிறப்புச்சாட்சிப் பத்திரம் வழங்கப்படவில்லையாம். குழந்தைகளுக்கு வேண்டிய பால்மா, சீனி என்பனவற்றை பெற முடியாமல் பெற்றோர் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

அரசு வழங்கியுள்ள சலுகைகளைக் கூட ஏழை மக்கள்
(2ம் பக்கம் பார்க்க)

**மணிவாக்கு**

அறியாமையை மறைப்பதால் அது அதிகரிக்கிறது. நேர்மையாய் உள்ளத்திலுள்ளதைக் கூறிவிட்டால், அவ்வறியாமை குறையுமென நம்புவதற்கு இடமிருக்கிறது. —காந்திமகான்

ஈழநாடு
THE EELANAADU

# 'காமன்வெல்த்' மகாநாடு

லண்டனில் கூடிக் கலைந்த 'காமன்வெல்த்' மகாநாட்டில் இலங்கை அரசும் கலந்து கொண்டது. 'காமன்வெல்த்' அமைப்பில் ஆசிய, ஆபிரிக்க, ஆஸ்திரேலியா முதலிய பல நாடுகள் சேர்ந்திருப்பதால் அவற்றினிடையே நல்லுறவும்ஒத்துழைப்பும்வளர இம் மகாநாடு உதவி இருப்பின், இம் மகாநாட்டில் இலங்கையும் கலந்துகொண்டதால் பயனுண்டு. ஆனால் இம் மகாநாட்டினால் சிறப்பாக இலங்கைக்கு உண்மையில் எவ்வித பயனுமேற்பட்டதா என்பது தெரியவில்லை.

பிரிட்டனின் ஆட்சிக்கு நாம் உட்பட்டிருந்தபோது பல பல பிரச்னைகள் நமக்கு ஏற்பட்டன. பெருந்தன்மையுடன் பிரிட்டன் நமக்கு அரசியல் சுதந்திரம் அளித்த தெனினும், அடிமை ஆட்சியில்நமக்கு ஏற்பட்ட பொருளாதார அரசியல் தீமைகள் பெரிதும் தீரவில்லை. அவற்றைத்தீர்க்க'காமன்வெல்த்' அமைப்பு உதவுமென்று எதிர்பார்த்தோம். ஆனால் உதவி செய்வதற்குப் பதில் சிக்கல்கள் அதிகரித்துள்ளதையே காண்கிறோம்.

'காமன்வெல்த்' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு 'பொதுச்செல்வம்' என்பது கருத்து. ஆனால் இலங்கை இந்தியா முதலிய நாட்டு மக்களைப் பொறுத்தவரை இந்தச்செல்வம் பொதுவானதாக இல்லை. பிரிட்டனுக்கு அடிமைப்பட்டிருந்த போது நாம் பர்மா, இந்தியா, மலேஷியா, முதலிய நாடுகளுக்குச்செல்லவும், வேலைவாய்ப்புக்களைப் பெறவும், குடியேறவும் முடிந்து வந்தது. ஆனால் இப்போது அந்நாடுகளுக்குநாம் எட்டியும்பார்க்கமுடியாமல்தடைகள் ஏற்பட்டுள்ளன.

ஆஸ்திரேலியா நாடுஇந்தியாவைவிட பலமடங்கு பெரிது. ஆனால் அங்கு ஜனத்தொகையோ அநேகமாக இலங்கையிலுள்ளது போலவே உள்ளது. அது வெள்ளைக்காரரின் செல்வமாகவே இருந்துவருகிறது. மற்ற நிறத்தவர் அங்கு தாராளமாகச் செல்லவோ குடியேறவோ முடியாது. குடியேற முடிந்தால், இலங்கை இந்தியா முதலிய நாடுகளில் ஜனத்தொகை, வேலைவாய்ப்புக்கள் முதலிய பிரச்னைகளும் மண்டையிடிகளும் பெரிதும் குறையமுடியும். ஆஸ்திரேலியாவும் பெரிதும் அபிவிருத்தியடையலாம். காமன்வெல்த்திலே வெள்ளையரின் ஆதிக்கத்திலுள்ள மற்றநாடுகளும் வெள்ளையருக்குத்தான் உரிமையாகவுள்ளன. அவை வெள்ளையரின் செல்வமாகவே உள்ளனவேயன்றி, பொதுச் செல்வமாகவோ, பொதுநல நாடுகளாகவோ இருக்கவில்லை. இந்த அவல நிலையை, மனிதருக்குச் செய்யும் அநீதியை நீக்கவேண்டுமென்று இம்மகாநாட்டில் ஒருவரும் கேட்கத் துணியவில்லை. இலங்கை, இந்தியா பிரதிநிதிகளும் இதைப்பற்றிக் கேட்க முன்வராதது துரதிருஷ்டவசமாகும்.

நாம்இந்த'காமன்வெல்த்'தில் இனியும் நீடித்திருக்க வேண்டுமாயின், இதனால் நமக்கு நன்மைஇருக்கவேண்டும். அடிமைப்பட்டிருந்த போது ஏற்பட்ட மனித பொருளாதாரப்பிரச்னைகளாவது திரபடிப்படியாக முயற்சிகள்செய்யப்படவேண்டும். இன்றேல் இந்த ஸ்தாபனம் நீடித்து வளரமுடியுமா என்பது மிகச்சந்தேகமே.

# எம்.பீ.யாவதற்கு தேவையான தகுதிகள்

## சட்டமும் சமுதாயமும்

செ. சிறீக்கந்தராசா
சட்டத்தரணி

அரசியலமைப்புச்சட்டம்மட்டுமா அரசாங்க ஊழியரின் அரசியலுரிமைபற்றிக் கூறுகின்றது? தாபனக்கோவையின் 36ஆம் அத்தியாயமும் இவை பற்றிக் கூறுகின்றது. 36ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளை விளங்கிக்கொள்ளுதல் அவசியம். தாபனக்கோவையின் 36ஆம் அத்தியாயத்தில் உள்ள ஏற்பாடுகளின்படி பின்வருவோர் அரசியல் உரிமையைப் பிரயோகிக்கமுடியாது:-

(1) நீதித்துறை உறுப்பினர்கள் [அதாவது நீதவான், நீதிபதி முதலாயினோர்.]

[2] போர்ப்படைச் சேவைகளின் உறுப்பினர்கள்.

[3) பொலிசுப்படைஉறுப்பினர்கள்; பொலிசுக் கடமைகளைப் புரியும் ஏனைய சமாதான அலுவலர்கள், அதாவது கிராமசேவையாளர் முதலியோர்.

[4] சிறைச்சாலை அலுவலர்கள்.

[5] பகிரங்க சேவையில் உள்ள பதவிநிலை அலுவலர்கள் அல்லது கண்காணிப்பு அலுவலர்கள்; தாம் வகிக்கும் பதவிக்கான சம்பள அளவுத் திட்டத்தின்படி தமது தொடக்கச் சம்பளத்தை மாதமொன்றுக்கு ரூபா 560/- ஆகவோ அதற்கு மேற்பட்டதாகவோ உடையவர். பதவிநிலை அலுவலர் அல்லது கண்காணிப்பு அலுவலர் எனப்படுவார்.

அரசியல் உரிமை அற்றவர்கள் ]560 ரூபாவுக்கு மேற்பட்ட சம்பளம் பெறுவோர்] தேர்தல்தொடர்பில் செய்யக்கூடியவை யாவை? செய்யக்கூடாதவை யாவை? Sec. 1:2 of the Esta. Code.

செய்யக்கூடாதவை

]அ] பாராளுமன்றத்துக்கான [தேசிய அரசுப்பேரவைக்கு] அல்லது உள்ளூராதிகார சபைக்கான தேர்தலில் தமது வாக்கை அளிப்பதற்கான உரிமை தவிர வேறெந்த உரிமையும் அவர்க்கிடையாது.

[ஆ] தேசியஅரசுப் பேரவைக்கான தேர்தலில் எந்த விதத்திலும் பங்குகொள்ளுதலாகாது.

[இ] உள்ளூராட்சிச் சபைக்கான தேர்தல் எதிலும் எந்த விதத்திலும் பங்குகொள்ளுதலாகாது.

[ஈ] தேசிய அரசுப்பேரவையில் உள்ள அல்லது உள்ளூராட்சிச் சபையில்உள்ள ஏதேனும் தெரிவு ஆசனத்துக்கு அல்லது நியமன ஆசனத்துக்கு போட்டியிடும் வேட்பாளருக்கு எந்தவிதத்திலும் ஆதரவளித்தல் ஆகாது.

[உ] தேசியஅரசுப் பேரவையில்உள்ள அல்லது உள்ளூராட்சிச்சபையில்உள்ளஏதேனும் ஆசனத்துக்கு தாமே நியமிக்கப்படும் வண்ணம் அல்லது தேர்ந்தெடுக்கப்படும் வண்ணம் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளுதலாகாது. இவ்வாறாக, 560 ரூபாவுக்கு மேற்பட்ட மாதச்சம்பளம் பெறும் அரச அலுவலர்கள் எந்தவிதத்திலும் அரசியலில் பங்குபற்ற முடியாது. இங்கே ஒருகேள்வி எழுகின்றது. [560 ரூபாவுக்கு மேற்பட்ட மாதச்சம்பளம் பெறும் அரச அலுவலர்]அதாவது பதவிநிலை அலுவலர் (Staff Officer) அரசியலில் பங்குகொள்ள முடியாது என்றால் அவருடைய மனைவியின்/கணவனின் நிலை என்ன? அவருக்கு அரசியலில் உரிமை உண்டா? இல்லையா? அவருக்கும் உரிமை கிடையாது. அதாவது சம்பந்தப்பட்ட பதவிநிலை அலுவலர் ஆணாயின் அவருடைய மனைவிக்கும் அரசியல் உரிமை கிடையாது. சம்பந்தப்பட்ட பதவிநிலைஅலுவலர் பெண்ணாயின் அவருடைய கணவனுக்கும் அரசியலுரிமை கிடையாது. அதாவது விடயத்துக்கேற்ப அந்த மனைவியும் அல்லது கணவனும், அவர் ஒரு பதவிநிலை அலுவலர் என்றாற் போன்றே கணிக்கப்படுவர். பதவிநிலை அலுவலர் செய்யலாகாது எனத் தடைசெய்யப்பட்ட செயல் எதனையும் அவருடைய மனைவி/கணவன் செய்யின், அது, அந்தப்பதவிநிலை அலுவலரால் செய்யப்பட்ட ஒன்றாகவே கணிக்கப்படும்.

அரசியல் உரிமை அற்ற ஓர் அலுவலர், தேர்தலில் ஒரு வேட்பாளராக நிற்க விரும்பினால்? (Cap:36:1:3) 560 ரூபாவுக்கு மேற்பட்ட மாதாந்தத் தொடக்கச் சம்பளம் பெறும் ஓர் அலுவலர் தேர்தலில் ஒரு வேட்பாளனாக நிற்கவிரும்பினால், அல்லது வேட்பாளராக நிற்பதற்கான ஆயத்தங்களை வெளிவெளிவாகவே செய்ய விரும்பினால் அல்லது வெற்றிபெறுவதற்கான சாத்தியக்கூறுகள் தமக்கு உண்டா என்பதைச் சோதித்தறிவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடவிரும்பினால் அவர் உடனடியாகத் தமது பதவியைத்துறத்தல்வேண்டும்என்று தாபனக்கோவையின் 36ஆம் பிரிவு கூறுகின்றது. Says somthing (About Vaddukoddai Petition)

செய்யப்படாதென மேலே தடைசெய்யப்பட்ட, ஒரு செயலை பதவிநிலை அலுவலர் ஒருவர் செய்யின் என்ன நடக்கும்? அத்தகைய அலுவலர் அவர் வகிக்கும் பதவியிலிருந்து உடனடியாக நீக்கப்படுவார் என்று தாபனக் கோவையின் 36ஆம் அத்தியாயத்தின் 1ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவு கூறுகின்றது. [தொடரும்]

# "தெளிவான கொள்கையும் நல்லதிட்டமும் கொண்டது"

## 'தமிழ்மக்கள்இயக்க'த்தலைவர்விளக்கம்

யாழ்ப்பாணம், இங்கள் "தமிழ் கட்சிகளுக்குள், தெளிவான கொள்கை விளக்கத்தோடு, அக்கொள்கைகளை நிறைவேற்றக் கூடிய திட்டங்களைக்கொண்ட ஒரேதமிழ் கட்சிதான் எங்கள் தமிழ் மக்கள் இயக்கம்'' என்று இயக்கத் தலைவரும் ஊர்காவற்றுறை தொகுதி வேட்பாளருமான திரு யோகேந்திரா துரைசுவாமி வேலணையில் நடந்த கருத்தரங்கில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் கூறியதாவது: "நாம் எங்கள் திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம் தமிழீழம், இழந்த உரிமைகளைப் பெறுவதோடு, தாய் நாட்டில் தன் மானத்துடனும் சுய-மரியாதையுடனும் வாழமுடியும். இதனுடன், இலங்கையின் பல்வேறு திக்குகளிலும் வாழ்கின்ற எல்லா தமிழ் மக்களின் நலன்களுக்குப் போராடும் ஒரே ஒரு கட்சி தான் இவ்வியக்கம்.

கருத்தரங்கிற்கு தலைமை வகித்த திரு. எம். செல்வரத்தினம் பேசுகையில், "தமிழ் மக்கள் இயக்கத்தின் கொள்கைகள் உண்மையில் வரவேற்கத்தக்கவை. அவற்றின் திட்டங்களை செயல்படுத்த, தமிழ் மக்கள் அமோக ஆதரவு அளிக்க வேண்டும்'' என்றனர். கருத்தரங்கில் திருவாளர்கள்: இரகுநாதன், தில்லைநாயகம், கேதாரநாதன், நாகேந்திரன் ஆகியோரும் பேசினார்கள்.

## அ. இ. அ. தி. மு. க.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. எம். ஜி ராமச்சந்திரனுக்கு தங்களின் விசுவாசத்தைக் காட்டியிருந்தனர். இந்த நிலையில் கழகத்தினரின் ஏகோபித்த கருத்துக்கு மதிப்பளிக்க திரு. எம். ஜி ராமச்சந்திரன் விரும்புவதாகத் தெரியவருகிறது.

அ. இ. அ. தி. மு. கழகத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு முதலமைச்சராக திரு. எம் ஜி. ராமச்சந்திரன் பதவி ஏற்கும் பட்சத்தில் நாஞ்சில் மனோகரனுக்கு முக்கிய நிதி அமைச்சர் பதவி அளிக்கப்படலாமென்று நம்பப்படுகிறது. பின்னர் சில மாதங்களின் பின் அமைச்சரவையில் வேறு மாற்றங்களை எம். ஜி. ஆர். செய்யலாமென்றும் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

## 500 குழந்தைகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பயன்படுத்த முடியாதவாறு நிலைமை உருவாகியுள்ளது கண்டு மக்கள் மத்தியில் பலத்த கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கூட்டணிக்கிளை நிர்வாகிகள்

கொக்குவில், ஞாயிறு நல்லூர்த் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொக்குவில் கிராமசபை 11ம் வட்டாரக்கிளையின்அங்குரார்ப்பணக்கூட்டம் அமைப்புச்செயலாளர் திரு க. பரமசாமி தலைமையில் நடைபெற்றபோது கீழ்க்கண்டோர் நிர்வாகக்குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. பண்டிதர் நா. இராசையா, உபதலைவர்: திரு. எம். சபாபதிப்பிள்ளை, செயலாளர்: திரு. த. தியாகமூர்த்தி, உபசெயலாளர்: திரு. ஆ. தருமராசா, பொருளாளர் திரு. செ. இராசதுரை மற்றும் 10 நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

நல்லூர் தொகுதி தமிழர் விடுதலைக்கூட்டணியின் கொக்குவில் கிராமசபை 4ம் வட்டாரக் கிளையின் அங்குரார்ப்பணக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது கீழ்க்காண்போர் நிர்வாக குழுவினராகத்தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. எஸ். எம். ஆறுமுகம், உபதலைவர்:, திரு. சி. சிங்காரவேலு, செயலாளர்: திரு. க. ஸ்ரீதரன், உபசெயலாளர்: திரு க. வர்ணகுலசிங்கம், பொருளாளர்: திரு. மு சுப்பிரமணியம்.

# "முதலில் பொருளாதாரம் அதன்பின் போராட்டம்"

— வி. குமாரசாமி

யாழ்ப்பாணம், திங்கள் "உணவில் நாம் தன்னிறைவு கண்டபின்னர் தான் நாம் தமிழ்ஈழப் போராட்டத்தை ஆரம்பிக்கவேண்டும். அடுத்த 3 வருடகாலத்தில் தமிழ்ப்பகுதியை பொருளாதார ரீதியில் அபிவிருத்தி செய்து உணவில் தன்னிறைவு காணவேண்டும். அதன் பின்போராட்டம் ஆரம்பிக்க வேண்டும்."

வரணி சாவலைப்பிட்டி கந்தசாமி கோவில் முன்றலில் நடந்த கருத்தரங்கில் சாவகச்சேரித் தொகுதியில் தமிழ் ஈழ ஜி. ஜி. காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் திரு. வி. குமாரசுவாமி பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

வாலிபர் முன்னணி அமைப்பாளர் திரு. கே. எஸ். கதிர்காமநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. வி. குமாரசுவாமி மேலும் கூறியதாவது;

"கடந்த 30 வருடங்களாக பொருளாதாரத்துறையில் எவ்வித அபிவிருத்தியும் நாம் காணவில்லை. அலங்காரப் பேச்சில் தான் நமது நேரத்தை செலவிட்டிருக்கிறோம். உண்மையில் நாம் தமிழ் ஈழம் காணவேண்டுமானால் பொருளாதார அபிவிருத்தி செய்ய வேண்டும். அதற்குத்தான் 3வருடம் கேட்கின்றேன். பொருளாதாரம் முதல் போராட்டம் பின்பு என்பதை வாலிபர்கள் உணர்ந்து விட்டார்கள்"

(க)

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், திங்கள் யாழ்ப்பாணம், வெள்ளாந்தெரு, ஸ்ரீ ஞானவைரவசுவாமி கோவில் அலங்கார உற்சவம் இன்று முதல் ஆரம்பமாகி, ஆடி மாதம் 4ந் திகதிவரை நடைபெறும். இறுதித்தினம் 1008 சங்காபிஷேக வைபவம் இடம் பெறும்.

## நல்லூர்த்தொகுதி உதவிஅரசாங்க அதிபர் காரியாலயம்

யாழ்ப்பாணம், திங் "மக்களின் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாக்கப்படவே இத்தகைய அலுவலகங்கள் திறக்கப்படுகின்றன'' என்று திருநெல்வேலி சந்திக்கு அருகாமையில் நல்லூர்த் தொகுதி உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தை திறந்துவைத்துப்பேசிய யாழ். அரசாங்கஅதிபர் திரு, டபிள்யூ ஏ. எல். ஏ. விஜயபால கூறினார்.

அவர் தமதுஉரையில், மேலும்பேசுகையில் கூறியதாவது "இலங்கையின்ஜனத்தொகையில் இரண்டாவது இடத்தைவகிக்கும்பகுதி யாழ். மாவட்டம், அதிலும் 60,000க்கு மேற்பட்ட மக்கள் நல்லூரில் வசிக்கிறார்கள்.

இவர்களது 60,000 கூப்பன்களுக்கு யாழ்ப்பாண அரசாங்க செயலகத்தில் பதிவுண்டு இதனால் அவர்கள் தங்களுடைய தேவைகளைப்

(6-ம் பக்கம் பார்க்க)

## செய்திச் சுருக்கம்

### இனக் கலகம்

தென் ஆபிரிக்காவில், கறுப்பர்களுக்கும் வெள்ளையர்களுக்குமிடையே கடந்த சில தினங்களாக ஏற்பட்டுவரும் கலகத்தில் நேற்றுவரை பதின்மூன்று பேர் மாண்டதாக அறிவிக்கப்படுகிறது.

### பூட்டோ விஜயம்

பாகிஸ்தான் பிரதமர் சுல்பிகார் அலி பூட்டோ அரபுநாடுகளுக்கு விஜயம்செய்து வருகின்றார். நேற்று சவூதி அரேபியாவுக்கு விஜயம்செய்தார். மன்னரைச் சந்தித்து, நெருக்கடி காலத்தில் பாகிஸ்தானுக்கு சவூதி அரேபியா அளித்த உதவிகளுக்கு நன்றி செலுத்தினர். இன்று பிரதமர் பூட்டோ லிபியாவுக்குச் செல்கின்றார். கேர்ணல் கடாபியைச் சந்திப்பார்.

### மணிலா மகாநாடு

உலக உணவு மன்றக் கூட்டம் நாளை மணிலாவில் ஆரம்பமாகிறது. உலக தானிய அமைப்பு ஒன்றை நிறுவுவது பற்றி இம்மாநாட்டில் ஆலோசிக்கப்படும்.

### தேர்தல் செய்தி

உத்தரப் பிரதேச சட்டசபைக்கு நடைபெற்ற தேர்தலின் கடைசித் தொகுதியின் முடிவு நேற்று அறிவிக்கப்பட்டது. இத் தொகுதியில் ஜனதா வெற்றிபெற்றுள்ளது. உத்தரப் பிரதேச சட்டசபையின் மொத்த ஆசனங்கள் 425. இதில், ஜனதாவுக்கு 351 தொகுதிகள் கிடைத்திருக்கின்றன. ஜனதா மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் இங்கு பெற்றிருக்கிறது. மேற்கு வங்காளத்தில், ஆட்சிக்கு வரப்போகும் மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கூட்டணிக்கு மொத்தம் 229 ஆசனங்கள் கிடைத்திருக்கின்றன. இத்தொகையில், மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சிக்கு மட்டும் 177 ஆசனங்கள் கிடைத்திருக்கின்றன. மொத்தமாகவுள்ள 294 தொகுதிகளில், இன்னும் இரண்டு தொகுதிகளின் முடிவுமட்டும் வரவேண்டும்.

### இராமேஸ்வரத்தில்

இராமேஸ்வரத்தில், புதிய தண்ணீர் விநியோகத்திட்டம் அமுல்படுத்தப்படவிருக்கிறது. மாநில அரசின் எதிர்பார்க்குக்கிணங்க இந்த நடடிக்கை எடுக்கப்படுகிறது.

### கிருஷ்ணமேனன் சிலை

லண்டனில் கிருஷ்ணமேனனின் சிலையொன்று நேற்று திறக்கப்பட்டது. இந்தச்சிலைத் திறப்புவிழாவுக்கு பிரிட்டிஷ் பிரதமர் கலகன் உட்படப் பல இந்திய பிரிட்டிஷ் தலைவர்கள் வாழ்த்துச் செய்திகள் அனுப்பி வைத்துள்ளனர்.

### கிரிக்கெட் டெஸ்ட்

லாட்ஸில் நடைபெற்றுவரும் இங்கிலாந்து - ஆஸ்திரேலிய கிரிக்கெட் டெஸ்டில் மூன்றுவது நாளான நேற்று ஆஸ்திரேலியா ஏழு விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 278 ஓட்டங்கள் எடுத்திருந்தது. இங்கிலாந்து தனது முதல் இன்னிங்ஸில் மொத்தம் 216 ஓட்டங்கள் எடுத்தது. போதிய வெளிச்சம் இல்லாத காரணத்தால் நேற்றைய ஆட்டம் நேரத்துடனேயே முடிந்தது.

### செய்திச் சிறப்பு

ஆகாஷவாணி செய்தி அறிக்கைத் தொகுப்பும் மற்றும் நிகழ்ச்சிகளும் இப்பொழுது ஒரு தனிச்சிறப்பைப் பெற்றுவிட்டது என்று இந்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சர் எல். கே. அத்வாணி பாராட்டுத்தெரிவித்துள்ளார். நெருக்கடி காலத்தின் பின்னர் நிகழ்ச்சிகள் இப்போது மிகவும் ரசனையாக இருப்பதாகத் தெரிவித்தார்.

# மொஸாம்பிக் நெருக்கடி!

## வெளிஇராணுவ உதவிகளை ஜனாதிபதி கோருகிறார்

### பாதுகாப்புச் சபை இன்று கூடுகிறது?

நியூயோர்க், ஜூன். 19

**மொஸாம்பிக்கில் ரொடீஷியாவின் ஊடுருவல், இராணுவத் தாக்குதலாக மாறிவிட்டது என்றும், இது பற்றி விவாதிக்க உடனடியாக ஐ. நா. பாதுகாப்புச்சபை கூட்டப்பட வேண்டும் என்றும் மொஸாம்பிக் அதிபர் கோரிக்கை விடுத்துள்ளார்.**

மொஸாம்பிக்கில் ரொடீஷியாத் துருப்புகள் ஊடுருவலை செய்தது ரொடீஷியாவிலுள்ள கொரில்லாக்களை அழிக்கவே என்றும், இப்பணி முடிந்துவிட்டதனால் ரொடீஷியத் துருப்புகள் வாபஸ் பெற்றுவிட்டனர் என்றும் ரொடீஷியப்பிரதமர் முன்னர் அறிவித்திருந்தார்.

ஆனால் நிலைமை முற்றிலும் மாறுபட்டதாக இருக்கின்றதென்று மொஸாம்பிக் அதிபர் அறிவித்துள்ளார்.

''ஊடுருவல்', இராணுவத் தாக்குதலாக மாறிவிட்டது. காட்டுமிராண்டித்தனமான முறையில் தாக்குதல்கள் நடத்திவருகின்றனர். இது நிறுத்தப்படவேண்டும். மொஸாம்பிக்கைப் பாதுகாக்க உலகநாடுகள் உடனடியாக இராணுவ உதவிகள் வழங்க வேண்டும். கடந்த ஒருவருடத்தில் மட்டும் 1432 குடிமக்களை ரொடீஷியத் துருப்புக்கள் கொன்று குவித்துவிட்டன. இது நீடிக்க, உலகநாடுகள் அனுமதிக்கக்கூடாது. மொஸாம்பிக்கைப் பாதுகாக்க உலகநாடுகள் உடன் உதவி அளிக்கவேண்டும்'' என்று கோரிக்கை விடுத்துள்ள மொஸாம்பிக் ஜனாதிபதி,

''ரொடீஷியாவின் பச்சையான ஆக்கிரமிப்பை விவாதித்து உடன் நடவடிக்கை எடுக்க ஐ நா. பாதுகாப்புச் சபை கூட்டப்படவேண்டும்'' என்று ஐ. நா. வைக் கேட்டுள்ளார்.

நியூயோர்க்கிலிருந்து வெளிவரும் செய்திகளின்படி, ஐ நா பாதுகாப்புச்சபை நாளை கூடலாமெனத் தெரியவருகிறது.

புதுச்சேரி நிலைமை:

## ஆட்சி அமைப்பது பற்றி எம். ஜி. ஆர். ஆலோசனை

சென்னை, ஜூன் 19

பாண்டிச்சேரியில் ஆட்சி அமைப்பது குறித்து அ. இ. அ. தி. மு. க பொதுச்செயலாளர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன், பாண்டிச்சேரி (புதுச்சேரி) சட்டசபை அங்கத்தவர்களுடன் நேற்று பேச்சுக்கள் நடத்தினர். இந்தப் பேச்சுவார்த்தை இன்று தொடர்ந்தும் நடைபெற்றது.

பாண்டிச்சேரி சட்டசபையின் மொத்த ஆசனங்கள் முப்பது. இதில் எம். ஜி. ஆர். கட்சி மொத்தம் 14 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. அறுதிப்பெரும்பான்மைபெற மேலும் இரண்டு அங்கத்தவர்களின் ஆதரவு தேவை.

சுயேச்சையாகப் போட்டியிட்டுத் தெரிவுசெய்யப்பட்ட இரண்டு சுயேச்சையாளர்களின் ஆதரவையும் பெற முயற்சிகள் நடைபெறும் அதேநேரத்தில், ஒரு சுயேச்சையாளர் ஏற்கனவே ஜனதா ஆதரவைப்பெற்றே போட்டியில் இறங்கியதாகத் தெரியவந்துள்ளது. நிலைமை இப்படி இருந்த போதிலும் அ. இ. அ. தி. மு. க. ஆட்சி அமைக்க முயற்சிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

# கட்சி மாறுதலை தடுக்கும் யோசனை

### எதிர்க்கட்சியினருடன் பிரதமர் மொரார்ஜி பேச்சு

புதுடில்லி, ஜூன் 19

கட்சிவிட்டு கட்சிமாறுவதைத் தடைசெய்யும் மசோதாவொன்றைக் கொண்டுவருவது பற்றி, பாரதப்பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் எதிர்க்கட்சிகளுடன் நேற்று பேச்சுவார்த்தைகள் நடத்தினர்.

இந்தப் பேச்சுவார்த்தைக்குப் பின்னர் பிரதமர் நிருபர்களிடம் பேசுகையில் ''கட்சி மாறுவதைத் தடுக்க கடுமையான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ள அரசு தயாராக இருக்கிறது, ஆனால் இவ்விஷயத்தில் எதிர்க்கட்சிகள் தயங்குவது போல் தெரிகிறது'' என்று கூறினர்.

''ஆட்சிமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர், அங்கத்தவர்கள் தங்கள் இஷ்டம்போல கட்சி மாறுகின்றார்கள் இதன்மூலம் தங்களைத் தெரிவுசெய்த வாக்காளர்களை அவர்கள் ஏமாற்றுகின்றார்கள். இது தடைசெய்யப்படவேண்டும். இந்த யோசனைபற்றி எதிர்க்கட்சிகளிடம் விபரமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் யோசித்து ஒருமுடிவு செய்யட்டும். அதற்காக அவகாசமும் அளிக்கப்பட்டுள்ளது'' என்றார் பிரதமர் மொரார்ஜி தேசாய்.

''சாதாரண குடிமகனுக்குள்ள உரிமைகளைவிட அதிக உரிமைகள், பிரதமருக்கு இருக்கக்கூடாது. இதனையே நான் விரும்புகின்றேன்'', என்றும் பிரதமர் கூறினர்.

நேற்று நடைபெற்ற பேச்சுக்களில் எதிர்க்கட்சிகள் தரப்பில், திருவாளர்கள் சவான், குப்தா, முகர்ஜி, திருமதி பார்வதி கிருஷ்ணன், திரு. சுலைமான் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## நாடும் நயமும்



வேலர்: எங்கடை பொடியன் விக்கிரி ஆருக்கு வோட் போடப் போருனும்?

மயிலர்: பலசரக்குக்கடை, புத்தகக்கடை, பூக்கடை எல்லாம் சாராயம் வாங்குவதற்கு வசதி செய்து தரும் கட்சிக்குத்தானும் தனது வோட்.

சுந்தர்

## காங்கிரஸ் செல்வாக்கு

சென்னை. ஜூன். 19

தமிழ்நாடு சட்டசபைத்தேர்தலில் காங்கிரஸ்கட்சிக்கு 29 லட்சம் மக்கள் வாக்களித்துள்ளனர். இதுகாங்கிரஸ் கட்சிக்கு தமிழ் நாட்டில் வலுவான தொரு அடித்தளம் உண்டுஎன்பதை எடுத்துக் காட்டுகிறது என்று தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. கருப்பையா மூப்பனர் தெரிவித்துள்ளார்.

எம். ஜி. ஆர். கட்சி அரசின் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கு காங்கிரஸ் தமது ஆதரவை அளிக்குமென்றும் அவர் கூறினர். (இ)

## ஜனநாயக கடமை!

சென்னை ஜூன் 19

சென்னை நகர் பகுதியான மந்தைவெளியில், 90 வயது மூதாட்டி இடைவிடாத மழையிலும் நனைந்து வந்து வாக்களித்தார்! இவரை, கட்சி ஆதரவாளர்கள் ரிக்ஷாவண்டியில் அழைத்துவர முயற்சித்தபோது அவர் ''எனது ஜனநாயகக் கடமையை நிறைவேற்றச் செல்லுகின்றேன். என்னை தொந்தரவு செய்ய வேண்டாம்'' எனக்கூறி, நடந்தே வாக்குச் சாவடிக்குச் சென்றார். (செ)

## ராஜன் கொலை விவகாரம்

திருவனந்தபுரம், ஜூன் 19

கேரளாவின் முன்னாள் முதலமைச்சரையும் மற்றும் மாணவன் ராஜன் விவகாரத்தில் பொய்சாட்சு மூலம் அளிப்பவரையும் உடன் கைதுசெய்யுமாறு கோரி எதிர்க்கட்சிகள் கேரள மாநிலத்தில் போராட்டங்கள் நடத்திவருகின்றனர்.

இதுவிஷயமாக பொலிஸ் பகுதியினர் இவர்களுக்கெதிராக கிரிமினல் வழக்குகள் தாக்கல் செய்ததாகக் கூறியும் மாணவர்கள் வகுப்புகளை பகிஷ்கரித்து போராட்டத்தில் இறங்கியுள்ளனர்

மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. எஸ். நம்பூதிரிபாத் மாணவர் கோரிக்கை நியாயமானதென கூறும்வேளையில், கேரள முதலமைச்சர் திரு. கே. அந்தோனி கருத்து வெளியிட மறுத்துள்ளார். (செ)

## ஜேம்ஸ் எர்ல்லே மீண்டும் கைது

பெட்ரோஸ், ஜூன் 19

அமெரிக்க நீக்ரோ மக்களின் இணையற்ற தலைவர், அமரர் மார்ட்டின் லூதர்கிங்கை கொலைசெய்த குற்றத்திற்காக உயர்நீதிமன்றத்தினல் சிறை வைக்கப்பட்ட திரு. ஜேம்ஸ் எர்ல்லே சிறையிலிருந்து தப்பி சிலதினங்களில் மீண்டும் கைது செய்யப்பட்டான்.

இவனுக்கு, அமெரிக்க உயர் நீதிமன்றம் 99 ஆண்டுகால சிறைத்தண்டனை வழங்கியிருந்தது சிறையில் கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டிருந்தும், அமெரிக்க பொலிஸ் பகுதியினருக்கு சவாலாக, சிறையிலிருந்து தப்பியோடி பின்னர், தீவிரதேடுதல் முயற்சியினல் மீண்டும் கிராமப்பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டான். (செ)

## புதியசந்தை

யாழ்ப்பாணம், திங்கள்

நீர்வேலிக்கிராம சபைப் பிரதேசத்திற்கான புதியமத்திய சந்தை ஒன்றை நீர்வேலி மத்தியிலுள்ள தச்சர் மடவளவில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான விசேட கூட்டத்தை நீர்வேலிக் கிராம சபை விசேட ஆணையாளர் திரு. குமாரவேலு கூட்டினர். இக்கூட்டத்தில் பொதுமக்களும் கலந்துகொண்டனர். (கா)

யாழ். புற்றுநோய் சிகிச்சைநிலைய ஸ்தாபித நிதிக்காக

## ஈழநாடு

தேர்தல் 77 போட்டி பிரவேசப்பத்திரம்

### போட்டிக் கேள்விகள்

(1) கீழே தரப்படும் 23 தேர்தல் தொகுதிகளி லும் வெற்றிபெறும் வேட்பாளர்களைக் குறிப் பிடுக:-

| தொ. இல. | தொகுதி | வெற்றி பெறும் வேட்பாளர் |
|---|---|---|
| 79. | ஊர்காவற்றுறை | ........ |
| 80. | வட்டுக்கோட்டை | ........ |
| 81. | காங்கேசன்துறை | ........ |
| 82. | மானிப்பாய் | ........ |
| 83. | கோப்பாய் | ........ |
| 84. | உடுப்பிட்டி | ........ |
| 85. | பருத்தித்துறை | ........ |
| 86. | சாவகச்சேரி | ........ |
| 87. | நல்லூர் | ........ |
| 88 | யாழ்ப்பாணம் | ........ |
| 89. | கிளிநொச்சி | ........ |
| 90. | மன்னார் | ........ |
| 91. | முல்லைத்தீவு | ........ |
| 92. | வவுனியா | ........ |
| 94. | திருகோணமலை | ........ |
| 95. | மூதூர் | ........ |
| 96. | கல்குடா | ........ |
| 97. | மட்டக்களப்பு (1) | ........ |
| | (2) | ........ |
| 98. | பட்டிருப்பு | ........ |
| 100. | சம்மாந்துறை | ........ |
| 101. | கல்முனை | ........ |
| 102. | பொத்துவில் (1) | ........ |
| | (2) | ........ |
| 103. | புத்தளம் | ........ |

(2) மேற்கண்ட 23 தொகுதிகளிலும் மிக அதிக வாக்குகளைப் பெற்று வெற்றிபெறும் வேட்பாளர் யார்?

| தொ. இல. | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| ........ | ........ | ........ |

(3) மேற்கண்ட 23 தொகுதிகளிலும் மிக அதிக பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று வெற்றிபெறும் வேட்பாளர் யார்?

| தொ. இல. | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| ........ | ........ | ........ |

(4) மேற்கூறிய 23 தொகுதிகளிலும் மிகக்குறைந்த பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்படும் வேட்பாளர் யார்?

| தொ. இல. | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| ........ | ........ | ........ |

(5) பின்வரும் தொகுதிகளில் வரிசைக் கிரமமாக வரக்கூடிய முதல் மூன்று வேட்பாளர்களையும் குறிப் பிடுக.

| தொ. இல. | தொகுதி | | வேட்பாளர் |
|---|---|---|---|
| 79. | ஊர்காவற்றுறை | 1. | ........ |
| | | 2. | ........ |
| | | 3. | ........ |
| 84. | உடுப்பிட்டி | 1. | ........ |
| | | 2. | ........ |
| | | 3. | ........ |
| 85. | பருத்தித்துறை | 1. | ........ |
| | | 2. | ........ |
| | | 3. | ........ |
| 88. | யாழ்ப்பாணம் | 1. | ........ |
| | | 2. | ........ |
| | | 3. | ........ |
| 97. | மட்டக்களப்பு | 1. | ........ |
| | | 2. | ........ |
| | | 3. | ........ |

தபாற்கட்டளை/ காசுக்கட்டளை இல ........ ரூபா ........ இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

'ஈழநாடு' ஞாயிறு வாரமலர்களிலும், புதன் கிழமைகளில் வரும் 'ஈழநாடு' தினசரியிலும் வெளியி டப்படும் "ஈழநாடு தேர்தல்-77போட்டி" நிபந்தனைக ளுக்கும் அதன்நடுவர் குழு"வின் தீர்மானத்துக்கும்கட்டுப் படுகிறேன் என்று இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

பெயர்: ... ... ... ... ... ... ...

முகவரி: ... ... ... ... ... ... ... ... ...

திகதி ........

கையொப்பம்

குறிப்பு: (1) மட்டக்களப்பும் பொத்துவிலும் இரட்டை அங்கத்தவர் தொகுதிகளானதால் வாக்காள ருக்கு இருவாக்குகள் உண்டு. எனவே இத் தொகுதிகளின் வேட்பாளர்களுக்கு கிடைக் கும் வாக்குகளை சரிபாதியாகப் பிரித்துவரும் எண்ணிக்கையையேஇப்போட்டியில் மற்றைய தொகுதிகளுடன்ஒப்பிடுவதற்கு எடுக்கப்படல் வேண்டும்.

குறிப்பு; (2) மட்டக்களப்பு-பொத்துவில் தொகுதிகளில் இப்போட்டிக்கான அதிகப்படி வாக்குகளைக் கணிக்கும் முறை:-

முதலாவது 2வது அங்கத்தவர்களின் அதிகப்படிவாக் குகள்= அவரவர் வாக்குகளின் சரிபாதியிலிருந்து மூன்றா வதாக வந்த வேட்பாளரின் சரிபாதி வாக்குகளைக் கழித்து வரும் தொகைகளாகும்.

# தமிழ்ஈழ ஜி. ஜி. காங்கிரசின் தேர்தல் விஞ்ஞாபனம்

யாழ்ப்பாணம், திங். மொழிக்கும், இனத்துக்கும் பாகுபாடற்ற சேவையில் பொருளாதார வளம்கொண்ட தமிழ் ஈழத்தை அமைக்கும் தேர்தல் விஞ்ஞாபனத்தை தமிழ் ஈழ ஜி. ஜி. காங்கிரஸ் தலைவர் திரு. ஆர். என். சிவப் பிரகாசம் மானிப்பாய் செல்ல முத்து விளையாட்டரங்கில் வைத்து வெளியிட்டார்.

இத்தேர்தல் விஞ்ஞாபனத் தில் கூறப்பட்டுள்ளதாவது:

அமரர் ஜி. ஜி. யின் கொள் கையில் எந்தமாற்றமுமில்லாது பூரண சுதந்திர உரிமையுள்ள தமிழினத்தின் உரிமைக்குப் போராடுதல்;

சாதி சமயமற்ற தமிழீழ நல் லாட்சியை அமைக்கப்போராடு தல்;

சகல துறைகளிலும் பொரு ளாதார வழம்காண முன் னின்று உழைத்தல்.

சகல வேலையற்ற பிரஜைக ளுக்கும் தமிழ்ப்பகுதியில் வேலை வாய்ப்பளிப்பதற்கு நடவ டிக்கை எடுத்தல்;

சுயதேவைகளில் தமிழ்ப்பகுதி களில் தன்னிறைவு காணல்;

இழந்த உரிமைகளை வென் றெடுக்க உள்ளும் புறமும் போராடுதல்;

பேச்சுச் சுதந்திரம், எழுத் துச் சுதந்திரத்தைப் பேண நட வடிக்கை காணல்;

தரப்படுத்தலைப்போக்க நட வடிக்கை எடுத்து உயர்கல்வி வாய்ப்புக்களை மேம்படுத்தல்;

தமிழ்ப்பகுதிகளான ஊர் காவற்றுறை, மன்னார், காங் கேசன்துறை, பருத்தித்துறைத் துறைமுகங்களை இறங்குதுறை முகங்களாக மாற்ற உழைத் தல்;

தமிழ்ப்பகுதிகளில் பொரு ளாதாரவளம் கண்டால் நாமே தமிழ் ஈழத்தை நிறுவமுடியும் என்ற பல அம்சங்களைக் கொண்ட விஞ்ஞாபனத்தை வெளியிட்டு வைத்தனர்.

இதன் அடிப்படையில் எமது வேட்பாளருக்கு பிரசாரம் செய்வதெனவும் மக்கள் மத்தி யில் உரையாற்றினர். (செ)

# "ஜனநாயக சோஷலிஸ இலட்சியத்துக்கு உழைப்பேன்"

பருத்தித்துறைத் தொகு தியில் சுயேச்சையாகப் போட்டியிடும் திரு. கே. ரி. இராஜசிங்கம் வெளியிட் டுள்ள தேர்தல் விஞ்ஞாப னத்தில் ஒரு பகுதி இங் கே தரப்படுகிறது.

1. இந்நாட்டில் வாழும் தமிழ்மக்களை சுயநிர்ணய உரிமைகொண்ட தேசிய இன மாகப் பிரகடனப்படுத்தும் இலட்சியத்தை அடைய உழைத்தல்.

2. நாடுபூராவும் தமிழுக்கு உத்தியோக மொழி அந்தஸ்து பெறுதல்,

3. தமிழ்ப் பிரதேசங்களில் திட்டமிட்டு நடைபெறும் சிங் களக் குடியேற்றத்தைத் தடுத்து நிறுத்தல்

4 தமிழர்களுக்கும் தமிழ் மொழிக்கும், தமிழ்பேசும் மக் கள் அனுசரிக்கும் மதங்களுக் கும், பிறசக்திகளால் ஏற்படும் அபாயத்தை, இந்த நாட்டி லுள்ள, தமிழ்மக்களின் நல னில் அக்கறையும், நாட்டமும் கொண்டுள்ள, எம்மோடு ஒத்த அரசியல் கருத்துக்கள் கொண்ட. அரசியல் கட்சிகளு டன், இயக்கங்களுடன்சேர்ந்து அல்லது இணைந்து போராடு தல்.

5. சிங்கள இனம், தமிழ் இனத்தைப்பாரபட்சம் காட்டி தமிழர்களின் தன்மான உணர்ச்சிக்குப் பங்கம் ஏற்ப டாத விதத்திலும். தமிழ்ப் பகுதிகளில் பொருளாதாரப் புறக்கணிப்புகள் உருவாகாத விதத்திலும், தமிழ் இளைஞர் களின். உயர்கல்வி, தொழில் வேலை வாய்ப்பு ஆகியன பாதிக்காத விதத்திலும், தமி ழர்களின் உரிமைகளுக்கு உத் தரவாதம் அளித்தல்.

6. தமிழ் மாணவர்களின் உயர்கல்வி, தரப்படுத்தல் போன்ற திட்டங்களால்பாதிக் கப்படாமல், திறமைக்கு மதிப் பளிக்கச் செய்ய நடவடிக்கை பமந்கொள்ளல்.

7. தமிழர்களின் மத்தியில் நிலவும் சாதிப்பாகுபாட்டை முற்றாகஒழித்தல்.

8. ஜனநாயக, சோஷலிச இலட்சியத்தை எய்தலுக்காக உழைத்தல்

9. மதச்சார்பற்ற அரசு உருவாக்கல்.

10. சுரண்டல் அற்ற சமு தாயத்தை உருவாக்கல்.

11. வடக்கு, கிழக்கு மாகா ணங்களின் பொருளாதார வளத்தை ஸ்திரப்படுத்துவதற் காக விவசாய, கைத்தொழில், கடற்றொழில் சம்பந்தப்பட்ட ஆய்வுகள் மேற்கொண்டு, நட வடிக்கைகள் எடுத்துப் பொரு ளாதார வளத்தை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளல்.

12. ஐக்கியநாடுகள் சபை யில் மனித உரிமை சாசனத் திற்கமையஇந்நாட்டில்வாழும் தனிமனிதன் ஒருவனின் பேச் சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந் திரம், மதச் சுதந்திரம், நட மாடும் சுதந்திரம், ஆகியன வற்றிற்கு உத்தரவாதம் நாட லும், நீதிமன்றத்தால் விசா ரணைகள் ஏதுமின்றி சிறைச் சாலைகளில் அடைத்துத் துன் புறுத்தப்படுதல் ஆகியவற் றிற்கு எதிராகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுத்தல்,

# "நான் வெற்றிபெற்றாலும் கொள்கை மாறமாட்டேன்"

உடுப்பிட்டி, ஞாயிறு "நான் தேர்தலில் வெற்றி பெற்றால் நிச்சயமாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடனோ, யு. என். பியுடனோ சேர்ந்து கொள்ளமாட்டேன். எனது கொள்கைக்கு அங்கீகாரம்வழங் கிய மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்காகவேபாடு படுவேன்."

பருத்தித்துறைத் தொகுதி யில் சுயேச்சையாகப் போட்டி யிடும் திரு. கே. ரி. இராஜசிங் கம் மேற்கண்டவாறு தெரி வித்துள்ளார். தபசி வட்டாரத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பிலும் கருத்தரங்கி லும் பேசுகையிலேயே திரு. கே. ரி. இராஜசிங்கம் இவ் வாறு உறுதி அளித்தார். புலோலி கிழக்கு அறிவகம் சன சமூகநிலையத் தலைவர் திரு. உருத்திரன் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

திரு. இராஜசிங்கம் தொடர் ந்து பேசுகையில் கூறியதாவது: "பொதுத்தேர்தல்களிலே அர சியல் கட்சிகளும், வேட்பாளர் களும் தமக்கெனத் தனியான இடம்வைத்துப் போட்டியிட வேண்டும். பருத்தித்துறைத் தொகுதியில் போட்டியிடும் சுயேச்சையாளர்கள் பலர் தாம் வெற்றிபெற்றால் தமிழர் விடு தலைக்கூட்டணியை ஆதரிக்கப் போவதாகக் குறிப்பிட்டுக் கொள்ளுகின்றனர். தமிழர் விடுதலைக்கூட்டணியின் உத்தி யோகபூர்வமான வேட்பாளர் இத்தொகுதியில் போட்டியிடு கின்றார். இந்த உத்தியோக பூர்வ வேட்பாளரை எதிர்த் துப் போட்டியிட்டு விட்டு வெற்றிபெற்றால், தான் தமிழர் விடுதலைக்கூட்டணியில் சேர்ந்துகொள்வோம் என்று சொல்வது அபத்தமாகும்.

"தமிழர்விடுதலைக்கூட்டணி இவ்வாறு தம்மை எதிர்த்துப் போட்டியிட்டவர்களை மீண்டும் தனது அணியில் சேர்த்துக் கொள்ளுமா?

"நான இந்தத் தொகுதியில் சுயேச்சையாகப் போட்டியிடுகி றேன். எனக்கெனத் தனியான அரசியல்கொள்கைகள் உண்டு. இவைபற்றி எனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட் டுள்ளேன்.

'தமிழ்மொழிக்கும்தமிழனுக் கும் இனிமேல் வரப்போகும் அரசால் ஏற்படஇருக்கும் எந்த ஆபத்தையும் எனது உயிரைப் பணயம்வைத்தாவது எதிர்த் துப் போராடுவேன் அதுமட்டு மன்றி எனது கொள்கையுடன் ஒத்த அரசியல் கட்சிகளுடன் இணைந்து போராடுவேன்".

## எள்ளுருண்டையில்

# பெண்ணை மயக்கி சங்கிலி அபேஸ்!

கொழும்பு, ஞாயிறு எள்ளுருண்டை கொடுத்து பெண் ஒருவரை மயக்கியபின் அவரிடமிருந்து தங்கச்சங்கிலி திருடிய வாலிபர் ஒருவரை பொலிசார் கைது செய்துள்ள னர்.

இச்சம்பவம் பற்றி பொலிஸ் விசாரணைமூலம் தெரியவந்துள் ளதாவது:

சம்பவதினம் மயக்கமருந்து கலக்கப்பட்ட எள்ளுருண்டை ஒன்றை இரத்நாயகா என்ற இந்நபர் பிரஸ்தாப பெண் ணுக்குக் கொடுத்தாராம்.

இந்த எள்ளுருண்டையைச் சாப்பிட்ட சற்றுநேரத்தில் பெண் மயக்கமுற்றுவிடவே இந்நபர் அவரது தங்கச்சங்கி லியைத் திருடினாராம்.

இவர் ஏற்கனவே ஏழு திருட்டுக் குற்றங்களில் ஈடு பட்டவர் எனவும் பொலிசார் தெரிவித்தனர். (உ)

# தேர்த்திருப்பணி

யாழ்ப்பாணம், திங்கள் நீர்வேலிக் கந்தசாமி கோவிலுக்கு ஒரு புதிய சித் திரத்தேர் நிர்மாணிப்பதற் கென நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

புதியதேர் அமைப்பதற் கென தேர்த்திருப்பணிச் சபை ஒன்று அமைக்கப்பட்டதுடன் திருப்பணி வேலைகளை ஆரம் பிப்பதற்கு ஏற்ற நடவடிக் கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. (கா)

**RIO** (Jaffna) Daily 4 Shows

THE YEAR 1944

The British army was withdrawing on The face of Advancing Germans.

They were trapped in

## THE CAPTIVE CITY

see them fight it out

(A classic war Film)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

சிவாஜி - பத்மபிரியா முத்துராமன் - சகுந்தலா நடித்த

ஸ்ரீதரின் **வைரநெஞ்சம்**

(ஈஸ்ட்மன் கலர்)

49-வது நாள்

ராணி (யாழ்ப்பாணம்) எம். ஜி. ஆர். — லதா (இருவேடங்கள்) நடித்த தினசரி 4 காட்சிகள்

**நாளை நமதே**

(ஈஸ்ட்மன் கலர்)

மனோகரா [யாழ்ப்பாணம்] ஜெமினி - சாவித்திரி நடித்த தினசரி 4 காட்சிகள்

**கொஞ்சும் சலங்கை**

**சாந்தி** யாழ். நகர் தினசரி 4 காட்சிகள் போன்: 7642 10-30, 2-30, 6-30, 9-45

ஃ சிவாஜி ஃ விஜயா ஃ ராஜம்மா ஃ ரங்கராவ் நடித்த

K. S. கோபாலகிருஷ்ணனின்

**செல்வம்** (புதிய பிரதி)

**REGAL** (JAFFNA) Daily: at 10-30, a. m. 2-30, 4-45, 7-00 & 9-30 p. m. only

Dicing with Danger, Pulse Tingling Thrill - A-Minute Adventure in a Devil May care world of Cavier, Rubbling Champagne, Eye- CatchingGirls... and Ruthless Crooks.

Tony curtis - Roger moore - Susan George in

"Mission Monte Carlo"

(Color)

வெலிங்டன் [யாழ். நகர்] ரஞ்சன் நடித்த தினசரி 3, சனி ஞாயிறு 4 காட்சிகள்

**நீலமலைத்திருடன்**

லிடோ போன்: 7693 தினசரி 10-30, 2-30, 6-30, 9-45

(யாழ். நகர்) (புதிய பிரதி) ஜெய்சங்கர் நடித்த

**வல்லவன் ஒருவன்**

7-வது வாரம்

ராஜா (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள் போன்: 7180

தேவரின்

**திருவருள்**

(ஈஸ்ட்மன் கலர்)

குறிப்பு:- பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

சிவாஜி கணேசன், உஷா நந்தினி, (இருவேடங்களில்) சௌகார் ஜானகி

**மனிதனும் தெய்வமாகலாம்**

(ஈஸ்ட்மன் கலர்)

---

### ஏலவிற்பனை

கொழும்பு, மருதானை, டீன்ஸ்றோட், 210-ம் நம்பர் கடையில் எஸ். செல்வநாயகம் அவர்களிடம் 7-4-72 முதல் 31-12-75 வரையில் அடைவு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் 1977-ம் வருடம் ஜூலை மாதம் 14-ம் திகதி காலை 9 மணி முதல், மருதானை டீன்ஸ்றோட் 227-ம் நம்பர் கடையில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

என். எம். ஏ. ஸீ. அப்துல் ஹமீது அன் சன் ஏலதாரர்.

6482

---

### முகமாலைக் கிராமசபை

## கேள்வி விளம்பரம்

மேற்கானும் நன்கொடை வேலைக்கு 1977-ம் ஆண்டு ஆனி மாதம் 29-ந் திகதி (29-06-77) புதன்கிழமை காலை 10-00 மணி வரை இச்சபையில் பதிவு செய்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து 'சீல்' வைத்த கேள்விகள் முகமாலைக் கிராமசபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும். 1977-ம் ஆண்டு ஆனி மாதம் 21-ம், 28-ந் திகதிகளில் மாத்திரம் வழங்கப்படும். கேள்விப்பத்திரங்களிலேயே கேள்விகள் அனுப்பப்படுதல் வேண்டும். ஆனி மாதம் 21-ம், 28-ந் திகதிகளில் காலை 9-00 மணி முதல் பிற்பகல் 2-00 மணி வரை மாத்திரம் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும். கேள்விப்பிணையாக ரூபா 50/-ம் கேள்விப்பத்திரப்பணமாக ரூபா 10/-ம் செலுத்தப்படுதல் வேண்டும். பத்திரப் பணம் திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது. கேள்விக்காரரை முடிவாகத் தெரிவு செய்வதற்கும் அல்லது கேள்விகளை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ முகமாலைக் கிராம சபைத் தலைவருக்கு பூரண உரிமை உண்டு.

### வேலையின் விபரம்

கோவாளம் றோட்டு 1977.

அ. ஸ்ரனிஸ்லாஸ் ஜே. பி. தலைவர், கி. ச. முகமாலை, பளை.

முகமாலைக் கிராமசபை அலுவலகம், பளை. 17-06-1977. 6494

---

புலோலி சினிமாஸ் (பருத்தித்துறை) தினசரி 2-30, 6-30, 9-30 சனி, ஞாயிறு 10-30 முதல் முத்துராமன் - சுஜாதா

**வாழ்ந்து காட்டுகிறேன்**

நாகம்ஸ் (சுன்னாகம்) தினசரி 6-30, 9-30 சனி ஞாயிறு 2-30 சௌஜி — விஜயா நடித்த

**தங்கப்பதக்கம்**

வெஸ்லி [மானிப்பாய்] தினசரி 6-30, 9-30 சனி, ஞாயிறு 2-30 சிவாஜி — சாவித்திரி

**குறவஞ்சி**

at 4-45 p. m. DONT LOOK NOW

---

### விற்பனைக்கு

12 பேரர் வின்செஸ்ரர் புதிய துவக்கு உடன் விற்பனைக்குண்டு. பெமிற் உள்ளோர் மட்டும் தொடர்பு கொள்ளவும், விலை ரூபா 1600/- க்கு மேல். விபரங்களுக்கு டாக்டர் பரமேஸ்வரன், 655, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

6488

---

### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் சோலைவரி- 2-ம் கந்தாயம் 1977

1977-ம் ஆண்டு 2ம் கந்தாயத்திற்கான சோலைவரிப் பணம் 29-6-1977-ம் திகதி பி. ப. 3-00 மணிக்கு முன்னதாக மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் செலுத்தப்படல் வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப் பணத்திற்கு மேலதிகமாக 10% வேலியாத்துப்பணம் அறவிடப்படும்.

காசோலைகள், காசுக்கட்டளைகள், அஞ்சற் கட்டளைகள் முதலியன யாழ்ப்பாண மாநகர ஆணையாளரின் சார்பில், தபாற் சேவையில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு முன்கூட்டியே அனுப்பப்படல் வேண்டும். அத்துடன் வரியிறுப்பாளர்கள் ஆதனத்தின் தற்போதைய வரிமதிப்பு இலக்கமும், வீதியின் பெயர், வட்டார இலக்கம் முதலிய விபரங்களுடன் வரிப்பணத்தை அனுப்பும்படி வேண்டப்படுகின்றனர்.

க. சிவஞானம் மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம், யாழ்ப்பாணம். 20-6-77.

6492

---

### வரி விளம்பரம்

#### விற்பனைக்கு

33 சிறி வேட்போட்வான் ஒரிஜினல் பொடியுடன் 5 அந்தர் எவரி தராசு 10 அந்தர் எவரி தராசு அலுமாரி ஒன்று பிலிப்ஸ் ராண்ஸ்சிஸ்டர் றேடியோ லேடிஸ் மணிக்கூடு றலி பைசிக்கிள் சி. வே. இராசையா, 97, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

6479

---

### நகரசபை வல்வெட்டித்துறை வரியிறுப்பாளர்களுக்கு

## பிரதான அறிவித்தல்

1977-ம் ஆண்டு இரண்டாம் கந்தாயத்திற்கான ஆதனவரி 29-06-1977-ந் திகதி பிற்பகல் 12-30 மணிக்கு முன் இவ்வலுவலகத்தில் செலுத்தப்படல் வேண்டும். அதன்பின் கட்டாமல் இருக்கும் வரியின்மீது பத்து வீதம் பற்றுகைச்செலவாக அறவிடப்படும்.

இதுவரையுள்ள நிலுவைகளை உடனடியாகக் கட்டி உங்கள் ஆதனங்களை நடுக் கட்டல், விற்பனை செய்தல் ஆகிய விருப்பமற்ற நடவடிக்கைகளிலிருந்து தவிர்த்துக் கொள்ளுமாறு தயவாய் வேண்டுகின்றேன்.

கோபாலசுந்தரம் கந்தசாமி, செயலாளர், நகரசபை, வல்வெட்டித்துறை.

6491

---

## தேவை

நல்ல நிலையில் உள்ள பாவித்த அரைக்கும் யந்திரமும், மோட்டரும் (Grinding Mill & Motor) தேவை. உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

**சேவிகிளாஸ் அன்ட் மெட்டல் வேக்ஸ்**

நீர்வேலி. 6474

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

உரும்பராய் தெற்கு, அம்பலவாணர் கைம்பெண் சிவக்கொழுந்து

வழக்காளி

இல. ஈடு / 13122 ஆனைக்கோட்டை,

எதிராக

1. கதிரவேலு கணபதிப்பிள்ளையும்
2. மனைவி செல்லம்மாவும்

யாழ்ப்பாணம்-அத்தியடி,

3. சின்னத்தம்பி அருணாசலமும்
4. மனைவி நாகம்மாவும்

உரும்பராய்-உரும்பராய் வடக்கு.

5. திருஞானசம்பந்தர் பரங்கிரி நாதனும்
6. மனைவி சகுந்தலாவும்.

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டில் ஈடு / 13122 ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி, 1977 ஆம் ஆண்டு ஜூன் (ஆனி) மாதம் 29 ஆம் திகதி (29-6-77) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

#### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபாய் 7200/-ம், இதில் ரூபாய் 7200-க்கு 17-5-72 ஆம் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100 க்கு 9 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 587-25 சதமும்.

#### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய்க் கோவிற்பற்று சுதுமலையிறை "நுலுவாரக்காடு" நிலப்பரப்பு 16ம் குளி 17ம். இதில் வடக்குப்புறமாக நிலப்பரப்பு பத்து (10)ம். செய்பயிர் வான்பயிர்களும். எல்லை: கிழக்கு, மாலுமயிலுவக்குரிய ஆதனம். வடக்கு, சிட்னர் வேலுப்பிள்ளைக்குரிய ஆதனம். மேற்கு, 2 ஆம் எதிராளி கணபதிப்பிள்ளை பெண் செல்லம்மாவுக்குரிய ஆதனமும், கைவொழுங்கை முகப்பும். தெற்கு, இதன் மிகுதி ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட காணி அடங்கலும்.

361

முற்பதிவு E ——

135

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும் ஏல்விற்பனையாளரும்

தெல்லிப்பழை 6-4-1977

6471

ஈழநாடு
EELANADU

## தமிழ்மக்களுக்கு

# சுதந்திரக்கட்சி சேவை: 'சூரியர்' விளக்கம்

கிளிநொச்சி,ஞாயிறு

"இலங்கையில் 38 லட்சம் தமிழ் மக்கள் வாழ்க்கின்றார்கள். இதில் 11 லட்சம் பேர் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்றனர். மிகுதி 28 லட்சம் பேரும் மற்றைய எல்லா மாகாணங்களிலும் பரந்து வாழ்கின்றனர். இரண்டு மாகாணத்தில் உள்ள 11 லட்சம் பேருக்கும் தமிழ்த் தலைவர்கள் பிரதிநிதித்துவம் வகிக்கின்றனர். மிகுதி 28 லட்சம் மக்களுக்கும் 7 மாகாணங்களிலும் பிரதிநிதித்துவம் வகிப்பது யார்?"

வட்டக்கச்சியில், சிறீலங்கா சுதந்திரக்கட்சி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அமைச்சர் குமாரசூரியர் பேசுகையில் மேற்கண்ட கேள்வியை விடுத்தார்.

திரு. கா. விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அமைச்சர் தொடர்ந்து பேசுகையில் கூறிதாவது.

"ஐ.தே. கட்சி அரசாங்கம் 14 ஆண்டுகள் இந்த நாட்டை ஆண்டபொழுது அக்கட்சியுடன் தமிழ்க்காங்கிரஸ் தமிழரசுக்கட்சிகள் இணைந்துதான் ஆட்சியை நடத்தின. அப்பொழுது தமிழ் மக்களின் பிரச்னைகள் தீர்க்கப்பட்டதா? கிராமிய மக்களின் பொருளாதாரப் பிரச்னை தீர்க்கப்பட்டதா? நான் சார்ந்திருக்கும் சிறீலங்கா சுதந்திரக்கட்சி இலங்கையின் கிராமிய, விவசாய பாட்டாளி மக்களின் பொருளாதார நலனில் அக்கறை கொண்டு செயல்பட்டுவந்திருக்கிறது.

'குறிப்பாக எமது அரசு வடக்கு கிழக்கு மாகாணமக்களின் கிராமிய பொருளாதார நலனில் அக்கறைகாட்டி விவசாயிகளை உயர்த்தியிருக்கிறது. நீதிமன்றத்தில் தமிழ் உபயோகம்,யாழ்ப்பாணத்தில்பல்கலைக் கழகம் போன்றனவற்றையும், பாரிய வீடமைப்புத்திட்டங்களையும் உருவாக்கி வந்திருக்கிறது.

'குறிப்பாக கிளிநொச்சிப் பகுதியில் 35 கோடிரூபா அபிவிருத்திக்காக என் சிபார்சின் மீது செலவு செய்யப்பட்டுள்ளது. எனது இரு அமைச்சுகளிலும் மற்றும் சில அமைச்சு சார்பாகவும் மூவாயிரம் கிளிநொச்சி இளைஞர்கள், யுவதிகள் ஆகியோருக்கு வேலைவாய்ப்பைக் கொடுத்துள்ளேன்.

### தமிழர்களின் ஒற்றுமையீனம்

'தமிழ்த் தலைவர்களில் தலைசிறந்த சோஷலிசவாதியான திரு. அமிர்தலிங்கத்தை காங்கேசன்துறையில் ஏன் எதிர்த்துப் போட்டியிடவேண்டும்? சோஷலிச அடிப்படையில் உடுப்பிட்டித் தொகுதியில் போட்டியிடும் திரு. இராசலிங்கத்தை எதிர்த்து ஒன்பது பேர் ஏன் போட்டியிடுகின்றனர்? இவை தமிழ் மக்களின் ஒற்றுமையீனத்தைக் காட்டுகின்றன!

'ஒரு தேசியக்கட்சிமூலம் இரு இனங்களும் இணைந்தால்தான் தமிழ்மக்களின் பிரச்னைகளைத் தீர்க்க வாய்ப்பாக இருக்கும்' என்று அமைச்சர் திரு செ. குமாரசூரியர் கூறினார்.

# "சுயேச்சையாகப்போட்டி போடுவதில் தவறென்ன?"

முல்லைத்தீவு, ஞாயிறு

"கூட்டணி எம். பி. மூலம் ஆசிரியர் பதவி பெற்றால் அவர் தியாகி என்கிறார்கள். அமைச்சர் அல்லது அமைப்பாளர் மூலம், ஆசிரியர் பதவி பெற்றால், அவர் துரோகி என்கிறார்கள்" என்று முள்ளியவளையில், நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய திரு எஸ். ஏ. பிலிப்பையா கூறினார்.

முல்லைத்தீவுத் தொகுதியில் போட்டியிடும் சுயேச்சை வேட்பாளரான ஆசிரியர் பி.சந்திரசேகரியை ஆதரித்து திரு. வ. பொன்னம்பலம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

திரு. பிலிப்பையா மேலும் கூறியதாவது, "பட்டிருப்புத் தொகுதி சுதந்திரக் கட்சி அமைப்பாளர் திரு. கணேசலிங்கம் இன்று கூட்டணி அபேட்சகராகப் போட்டியிடுகின்றார். மன்னாரில் கடந்த உப. தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரித்தவர் இன்று கூட்டணி அபேட்சகராகப்போட்டியிடுகிறார். அப்படியானால் திரு. சந்திரசேகரி சுயேச்சையாகப் போட்டியிடுவதில் என்ன தவறு இருக்கிறது?" என்று கேட்டார். (ச)

## 'உரிமைகள் பெறும்வரை ஓயமாட்டோம்'

கிளிநொச்சி, ஞாயிறு

தமிழ் மக்களுடைய அடிப்படை உரிமைகளைப் பெறும்வரை ஓயாது உழைத்துவரும் தமிழர்விடுதலைக் கூட்டணியை ஆசிரிய உலகம் ஏகோபித்து ஆதரிக்கவேண்டும்

இவ்வாறு முரசுமோட்டையில் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் திரு. வீ. ஆனந்தசங்கரியை ஆதரித்து நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் பேசிய அகில இலங்கை தமிழர் ஆசிரிய சங்க உப செயலாளர் திரு. என். சோதிநாதன் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், "உடுப்பிட்டித் தொகுதியில் கூட்டணி வேட்பாளராகப் போட்டியிடும் திரு. கே. இராஜலிங்கத்தை எந்தவிதமான பாகுபாடும் காட்டாது கூட்டணியின் இலட்சியத்திற்கு மதிப்புக் கொடுத்து ஏகோபித்து ஆதரிக்கவேண்டும். உலக நாடுகளின் கண்ணோட்டத்தில் இருக்கும் எமது பிரச்னைகளுக்கு உடுப்பிட்டித் தொகுதியும் ஒரு அம்சமாகும் என்று கூறினார்.

# செல்லச்சாமியை ஆதரித்து சூறாவளிபிரசாரம்

கொழும்பு, ஞாயிறு

தமிழர் விடுதலைக்கூட்டணியின் ஆதரவுடன் கொழும்பு மத்தியில் போட்டியிடும் இ. தொ. கா. வேட்பாளர் திரு. செல்லச்சாமிக்கு ஆதரவுதேடுவதில் அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தினர், தமிழ்த் தொழிற்சங்க கூட்டணியினர், தமிழர் விடுதலைக் கூட்டணி, இளைஞர் பேரவை, மகளிர் பேரவை ஆகியவற்றின் கொழும்புக்கிளையினர், வர்த்தகர்கள் ஆகியோர் தினமும் சூறாவளி வேகத்தில் பிரசாரம் செய்துவருகின்றனர்.

வீடுகளுக்கும் வர்த்தக நிலையங்களுக்கும் சென்று இவர்கள் ஆதரவு திரட்டிவருகின்றனர். கடந்த சில தினங்களாக புதுச்செட்டித்தெரு, கதிரேசன் தெரு, ஆட்டுப்பட்டித் தெரு, கன்னாரத்தெரு, 4ம் 5ம் குறுக்குத் தெருக்கள் ஆகிய இடங்களிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு இவர்ள் விஜயம்செய்தனர். இவர்கள் செல்லுமிடங்களில் வாகனப்போக்குவரத்து தடைப்படுமளவுக்கு பெரும் கூட்டம் காணப்படுகிறது பட்டாசுகள் கொழுத்தப்படுகின்றன. மாலைகள், சால்வைகள் சூட்டப்படுகின்றன.

"மூன்று அங்கத்தவர் தொகுதியான கொழும்புமத்தியில், தமிழர் ஒருவர் பிரதிநிதித்துவம் பெறுவதற்கு அமோக வாய்ப்பிருந்தும் தமிழ் மக்கள் கடந்த 30 வருடங்களாக அவ்வாய்ப்பினைப் பயன்படுத்தத் தவறிவிட்டார்கள். அந்தத் தவறினை இம்முறை தமிழ்மக்கள் நிவர்த்திக்கவேண்டுமென்றும்; "யாழ்ப்பாணம். மட்டக்களப்பு, வன்னி, மலைநாடு என்று பிரதேச பகைமைக்குச் சாவுமணி அடித்து, மலைநாட்டின் ஒரு சாதாரண தேயிலைத் தோட்டத் தொழிலாளின் மகன் கொழும்புமத்தியில் பல லட்சம்தமிழரைப் பிரதிநிதித்துவம் செய்து, தமிழினத்தின் ஒற்றுமையையும் தமிழினத்தின்விடுதலைப் போராட்டத்துக்கு அளித்து தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவை உலகுக்கு பறைசாற்றவும் தமிழர் விடுதலைக் கூட்டணி தந்த நிறைவான சந்தர்ப்பத்தை பயன்படுத்த வேண்டும் என்றும், திரு. செல்லச்சாமியின் வெற்றி தமிழினத்தின் வெற்றி என்றும், இவர்கள் தமது பிரச்சாரத்தில் வலியுறுத்தி வருகின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை செட்டித்தெருவில் அலுவலகம் ஒன்றும் திறந்து வைக்கப்பட்டது பொதுக்கூட்டங்கள் வைப்பதற்கான ஏற்பாடுகளும் நடைபெறுகின்றன முஸ்லிம் மக்கள் சார்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் புத்தளம் வேட்பாளர் டாக்டர் எலியாஸ் திரு. செல்லச்சாமிக்காக விரைவில் இங்கு வந்து பிரசாரத்தில் ஈடுபடவிருக்கிறார்.

திரு. செல்லச்சாமியின் அபேட்சகர் நியமனத்தை அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. இ. பேரின்பநாயகமும், முஸ்லிம் வர்த்தக பிரமுகரான ஜனாப் சாலைநகர் அலியும் பிரேரித்து அனுமதித்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

## விக்கலுக்கு பலியானார்!

யாழ்ப்பாணம்,திங்.

உடல் வளர்ச்சியற்ற 22வயதான 2அடிஉயரமுள்ள ஒருவர் நண்பகல் சாப்பிடும் போது விக்கல் ஏற்பட்டு மயக்கம் தெளியாமலேயே மரணமானார்.

ஈச்ச மோட்டையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை விஜயரத்தினத்தின் மரண விசாரணையில் மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

யாழ். மரணவிசாரணை அதிகாரி சட்டத்தரணி எஸ்.எஸ். பிரான்சிஸ் மரண விசாரணை நடத்தினார்.

இரண்டு வயதாக இருக்கும் போது கிணற்றில் விழுந்த சம்பவம்,தலையில் பலத்த அடிபட்டதால், வளர்ச்சி குன்றியதாக விசாரணையில் கூறப்பட்டது. பிரேத பரிசோதனைக்கு உத்தரவிடப்பட்டு விசாரணை பின்போடப்பட்டுள்ளது.

## விரிவுரை பூர்த்தி

யாழ்ப்பாணம், திங்.

கடந்த வெள்ளிக் கிழமை பழம் றோட் கந்தர்மடம் பிள்ளையார் கோயிலில் நடைபெற்றுவந்த கம்ப ராமாயண விரிவுரை பூர்த்தியடைந்தது. திரு. சி. வை. நித்தியானந்த சர்மா இவ்விரிவுரையை நடாத்தினார்.

## நல்லூர்—

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பூர்த்திசெய்து கொள்வதற்கும் பெரும் சிரமப்படவேண்டியுள்ளது எனவே இத்தொகுதி மக்களின் இன்னல்களை நீக்கும் பொருட்டு இங்கு இக்காரியாலயம் திறக்கப்படுகிறது. இக்காரியாலயத்தின் மூலம் இத்தொகுதிமக்கள் தங்கள் தேவைகளை உடனுக்குடன் பூர்த்தியாக்கிக்கொள்ளவும் தமக்குஏற்பட்டிருந்த சிரமங்கள் பெருமளவில் குறைத்துக் கொள்ளவும் முடியுமென்று நம்புகின்றேன். தேர்தல் முடிவடைந்த பின்னர் அதிகமான ஊழியர்கள் நியமிக்கப்பட்டு இக் காரியாலயம் முழுமையாக இயங்கும்."

இக்காரியாலயத்தை நிறுவுவதற்கு முன்னாள் தேசியப் பேரவை உறுப்பினரும், அரசியல்அதிகாரியுமான திரு.சி. அருளம்பலம் பெரும் உதவி அளித்துள்ளார் என்றும் அவர் கூறினார் இக்கூட்டத்திற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. பற்றிக் தலைமைதாங்கினார். நல்லூர் கிராமசேவையாளர் திரு. க. செல்வரத்தினம் உரையாற்றினார். [கா]

புதுச்சேரியில் ஆட்சி அமைக்க

# தி. மு. க.வின் ஆதரவை ஜனதா கட்சி நாடியதா?

சென்னை, ஜூன் 19

"புதுச்சேரியில் ஆட்சி அமைப்பது தொடர்பாக எக்கட்சியினரும் இதுவரை எம்மிடம் உதவிநாடி வரவில்லை" என்று தி. மு. க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதி இன்று சென்னையில் தெரிவித்தார்

"புதுச்சேரியில் ஜனதா கட்சி ஆட்சி அமைப்பதற்கு தி. மு. க.வின் ஆதரவை நாடியுள்ளதாகக் கூறப்படுகிறதே இதுபற்றி என்ன சொல்கிறீர்கள்" என்று நிருபர்கள் இன்று கலைஞரைச் சந்தித்தபோது அவர்கள் ஒருவர் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

"புதுச்சேரி நிலைகுறித்து கழகம் கவனம் செலுத்தி வருகிறது" என்றும் கலைஞர் சொன்னார். (உ)

# "உரிமை தரும் எந்தக் கட்சியுடனும் ஒத்துழைப்பேன்"

யாழ்ப்பாணம், திங்.

'எந்தக்கட்சி தமிழரின் நியாயமான உரிமைகளை அளிக்க முன்வருகிறதோ அதனுடன் ஒத்துழைப்பேன்' என்று யாழ்ப்பாணத்தொகுதியில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் டாக்டர் ஏ. எல். ஏப்பிரஹாம் கூறினார்.

கடற்கரைவீதியில் றெக்ஸ மேசனில் திரு. கஸ்பார் மனுவேற்பிள்ளை தலைமையில் நடைபெற்ற கிளை அலுவலகத் திறப்புவிழாக் கூட்டத்தில் டாக்டர் ஏப்ரஹாம் மேலும் குறிப்பிட்டதாவது :-

தமிழர் கூட்டணியினர் தாம் ஐ. தே. கவுடன் ஸ்ரீ ல. சு. கவுடன், இடதுசாரி ஐக்கிய முன்னணியுடன் பேசிய பேச்சுவார்த்தைகளை வெளியிட்டு தேர்தலுக்குப்பின் கூட்டணி என்னசெய்ய போகின்றதென்பதைத் தெரிவிக்கட்டும்.

எந்தக்கட்சி தமிழரின் நியாயமான உரிமைகளை அளிக்க முன்வருகிறதோ அதனுடன் ஒத்துழைப்பேன். வீடில்லாப்பிரச்னை, வேலையின்மை, பஞ்சம், பசி, பட்டினியை அகற்றுவதற்காக, குறிப்பாக யாழ்ப்பாணத்தொகுதி ஏழை மக்களின் பிரச்னைகளைக் கவனத்திலெடுத்து அவற்றைத் தீர்க்க உழைப்பேன்.

மற்றும் திரு. எஸ். செபஸ்ரியாம்பிள்ளை, ஆசிரியர் அ. மாட்டின், திருவாளர்கள் ஜோ. ஜெயக்குமார், எஸ். பாலசிங்கம், ஆ மரியதாஸ் ஆகியோர் உரையாற்றினர். (கு)

## விநாயகர் ஆலய உற்சவம்

யாழ்ப்பாணம், திங்கள்

திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோவில் மகோற்சவம் நாளைசெவ்வாய்க்கிழமை ஆரம்பமாகிறது

பத்துத்தினங்கள் இவ்வுற்சவம் நடைபெறும். (உ)

## இன்று

யாழ்ப்பாணம், திங்.

இலங்கைப் பல்கலைக்கழக யாழ் வளாக செனட் மண்டபத்தில், 'தமிழ்நாட்டின் கல்விச் சீர்திருத்தங்கள்' என்னும் பொருள்பற்றி சென்னைப் பல்கலைக்கழக கல்வித்துறைப் பேராசிரியை செல்வி இ. ஜி. வேதநாயகம் இன்று சொற்பெருக்காற்றவுள்ளார்.

பிற்பகல் 3-30க்கு ஆரம்பமாகும் இக்கருத்தரங்கிற்கு யாழ். வளாகத்தலைவர் பேராசிரியர் க. கைலாசபதி தலைமை தாங்குகின்றார். (கா)

## கருணாநிதி...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கலைஞர் மு. கருணாநிதி பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில், அறிஞர் அண்ணாவின் அடிச்சுவட்டைப் பின்பற்றி பொறுப்புள்ள ஒரு எதிர்கட்சியாக தி. மு. கழகம் செயல்படும் என்று கூறினார்.

துணைத் தலைவராக பேராசிரியர் அன்பழகன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## ஒருவர் கைது

கொழும்பு, ஞாயிறு

சிவனொளிபாதமலைக்குச் சென்றபோது பலியானதாகக் கூறப்படும் ஜேர்மன் உல்லாசப்பயணியான மெல்மட் எபனின் மரணம் தொடர்பாக ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைதாகி காவலில் வைக்கப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுத்துறை தெரிவித்தது.

மரணமடைந்த எபனுக்குச் சொந்தமானவை எனக்கருதப்படும் பொருட்கள் சிலவும் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஜூன் மாதம் 20-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna. Telegram Eelanaadu Telephone 389 Registered as News paper in Sri Lanka.